எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை... 3ஆம் பக்கத் தொடர்ச்சி

இன்னொரு பெண்மணி இருக்கிறார். அந்த அம்மா எல்லாவற்றையும் பேசி முடித்துவிட்டு இறுதியாக முதலமைச்சரைப் பார்த்து `மன்மத நன்றி' என்கிறார். என்ன, சட்டசபையா இது?

இன்னொரு உறுப்பினர் இருக்கிறார், ராணிப்பேட்டையின் சட்டமன்ற உறுப்பினர். அவர்கள் ஒருநாள் எழுந்து நின்று `எங்கள் தொகுதியில் ஒரு மிகப்பெரிய இரப்பர் தொழிற்சாலை இருக்கிறது. அந்த இரப்பர் தொழிற்சாலையில் தினந்தோறும் தீ மூட்டி எரிக்கிறார்கள். அதனால் இரப்பர் எரிந்து மாசு ஏற்படுகிறது, சுற்றுச் சூழல் எல்லாம் பாதிக்கிறது, நிறைய புகை வருகிறது. அந்தத் தொழிற்சாலை மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறார்கள். நாங்களெல்லாம் அமர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கிறோம். முதலமைச்சரும் எல்லாவற்றையும் கேட்கிறார்.

உடனே என்ன ஆயிற்று, சுற்றுச்சூழல் அமைச்சர் என்று ஒருவர் இருக்கிறார், அவர் எழுந்து நின்று பதில் சொல்கிறார். ``எதற்கெடுத்தாலும் தி.மு.கவைச் சொல்வார்கள் அல்லவா, இதெல்லாம் தி.மு.க ஆட்சியில்தான் நடக்கும், நம் ஆட்சியில் இவற்றையெல்லாம் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். நாங்கள் இரண்டு மாதமாக எல்லா இடங்களுக்கும் ஆய்வு சென்று கொண்டு இருக்கிறோம். இனிமேல் சுற்றுச்சூழலுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாமல் இருக்க, உடனடியாக அந்தத் தொழிற்சாலையில் நான் அரசு அதிகாரிகள், அமைச்சர் பெருமக்கள், முடிந்தால் முதலமைச்சரையும் அழைத்துக்கொண்டு சென்று நான் ஆய்வு செய்யப் போகிறேன். அந்தத் தொழிற்சாலையை இழுத்து மூடப் போகிறேன்" என்று சுற்றுச்சூழல் அமைச்சர் ஐந்து நிமிடங்கள் பதில் சொல்கிறார்.

தொழிற்சாலையே இல்லை!

அதன்பிறகு தொழில்துறை அமைச்சர் இருக்கிறார்கள் அல்லவா, அவர் எழுந்து நின்று சொல்கிறார். ``இங்கே பாருங்கள், சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு வந்தது என்றால், அதை நாம் சரியான முறையில் சரி செய்ய வேண்டும். தொழில் பாதிக்காத மாதிரி பார்த்துக்கொள்ள வேண்டும். நீங்கள் இப்படிச் செய்தீர்கள் என்றால், தமிழ் நாட்டிற்குள் மற்ற தொழில்கள் எல்லாம் வராது" என்று அவர் ஓர் ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டு அமர்ந்துவிட்டார்.

இராணிப்பேட்டையில் அப்படி என்ன தொழிற்சாலை இருக்கிறது, அப்படி என்ன இரப்பர் டயர் செய்கின்ற தொழிற்சாலை இருக்கிறது என்று தேடிப் பார்த்தால், அது ஒரு பஞ்சர் ஒட்டும் கடை. ராணிப்பேட்டையில் அப்படி ஒரு தொழிற்சாலையே இல்லை. சென்று தேடிப் பார்த்தால் வெறும் பஞ்சர் ஒட்டும் கடை.

இதற்கு ஓர் அமைச்சர் பதில் சொல்கிறார். ஆய்வுக்கு முதலமைச்சரையே அழைத்துச் செல்லப் போகிறாராம்! இப்படித்தான் இன்றைக்கு சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கிறது. இன்னும் நடனம் ஆடவில்லை, சண்டை போடவில்லை அவைதான் பாக்கி. இந்தச் சட்டமன்றம் இனிமேலாவது ஒழுங்காக நடக்க வேண்டும் என்றால், மக்கள் பிரச்சினையைப் பேச வேண்டும் என்றால், மதுராந்தகம் தொகுதியில் இருந்து உங்களுடைய சட்டமன்ற உறுப்பினராக, உங்களுடைய பிரதிநிதியாக என்னுடைய அன்புச் சகோதரர் திரு. பரந்தாமன் அவர்களை நீங்கள் ஜெயிக்க வைத்து அனுப்ப வேண்டும்.

ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் செய்வேன்!

நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் என்ன சொன்னார்? பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்தார். என்னென்ன தெரியுமா சொன்னார்? ``நான் ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் இதையெல்லாம் செய்யப் போகிறேன்" என்று சொன்னாரா இல்லையா?

முக்கியமாக என்ன சொன்னார்? மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாய் நம் தலைவர் கொடுத்தார். அதை உயர்த்தி 2,500 ரூபாய் தருகிறேன் என்று சொன்னாரா இல்லையா? இந்த முதலமைச்சர் சொன்னார், ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் கொடுப்பேன் என்றார். கொடுத்தாரா? கொடுக்கவில்லை.

அதே மாதிரி வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதந்தோறும் 4,500 ரூபாய் உதவித்தொகை ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் கொடுக்கிறேன் என்று இந்த முதலமைச்சர் சொன்னார். கொடுத்தாரா? கொடுக்கவில்லை.

அனைத்து இல்லங்களுக்கும், அனைத்து வீடுகளுக்கும் வருடத்திற்கு 6 கேஸ் சிலிண்டர் ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் கொடுப்போம் என்று சொன்னார். கொடுத்தாரா? கொடுக்கவில்லை. இப்போதுதான் அதைப்பற்றி யோசித்திருக்கிறார். என்ன தெரியுமா சொல்லியிருக்கிறார்? மூன்று கேஸ் சிலிண்டர் தருவேன், அதுவும் ``நான் எப்போது நினைக்கிறேனோ அப்போதுதான் கொடுப்பேன்" என்று சொல்லியிருக்கிறார்.

இது எல்லாவற்றையும் விட முக்கியம், விவசாயிகளுக்கு அனைத்துப் பயிர்க்கடனும் உடனடியாகத் தள்ளுபடி செய்வேன் என்று சொன்னார், கொடுத்தாரா? எதையும் கொடுக்கவில்லை. அதே நேரத்தில் சட்டம் ஒழுங்கு எந்த அளவிற்குச் சீர்கெட்டுப் போய் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும்.

500 படுகொலைகள் நடந்திருக்கின்றன!

கடந்த ஐந்து மாதத்தில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் ஆட்சிக்கு வந்து இன்னும் ஐந்து மாதம் கூட ஆக வில்லை, நான்கு மாதத்தில் தமிழ்நாடு முழுவதும் 500 படுகொலைகள் நடந்திருக்கின்றன. அதுவும் இந்த மேற்கு மண்டலத்தில், கோயம்புத்தூரில் பார்த்தீர்கள் என்றால், ஒரே மாதத்தில் 10 படுகொலைகள். சென்ற வாரம் ஒரே நாளில் எட்டு கொலைகள் நடந்திருக்கின்றன. பெண்களுக்கு எங்குமே பாதுகாப்பு இல்லை.

உங்களுக்குத் தெரியும், நேற்று முன்தினம் இங்கே வண்டலூரில் பள்ளி மாணவிக்குப் பாலியல் வன்கொடுமை நடந்திருக்கிறது. முதலில் இங்கே பிரச்சாரத்திற்கு வருகிறார்கள் என்று சொல்லி, அந்த மாணவியின் பெற்றோர்களுடைய புகாரைப் பெறாமல், பொய்ப் புகார் எடுத்திருக்கிறார்கள். என்னவென்று சொல்லி? பாம்பு கடித்தது என்று சொல்லி எடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இதே மதுராந்தகத்தில் இன்னொரு சம்பவம் நடந்திருக்கிறது. ஐந்தாம் வகுப்பு படிக்கக்கூடிய ஒரு மாற்றுத்திறனாளிச் சிறுமியை வீட்டில் யாரும் இல்லாதபோது ஒரு கும்பல் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்திருக்கிறார்கள்.

இதுதான் இந்த முதலமைச்சர் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்கின்ற பாதுகாப்பா? முதலமைச்சர் ஆட்சிக்கு வந்தவுடன் சிங்கப் பெண் படை அமைத்திருக்கிறேன் என்று அன்றைக்கே அறிவித்தார். நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், யாராவது ஒருவர், ஏதாவது ஒரு சிங்கப் பெண் படை காவல்துறையினரை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? நான்கு மாதமாக எங்குமே கிடையாது, வெறும் அறிவிப்பு.

இந்தக் கேடுகெட்ட ஆட்சியை, இந்த வெட்கங்கெட்ட ஆட்சிக்கு ஒரு பாடத்தைப் புகட்ட வேண்டும் என்றால், இந்தத் தேர்தலில் பரந்தாமன் அவர்களை நீங்கள் மதுராந்தகம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்து அனுப்ப வேண்டும்.

அரிவாள் வெட்டுக்குப்
போட்டியாக மின்வெட்டு!

அரிவாள் வெட்டுக்குப் போட்டியாக இந்த ஆட்சியில் இன்னொன்று இருக்கிறது. அது என்னவென்றால் மின் வெட்டு. எங்குமே மின்சாரம் இல்லை. முதலமைச்சர் தொகுதியில் மின்சாரம் இல்லை. பெரம்பூரில் பார்த்தீர்கள் என்றால் தினமும் மக்கள் குடும்பம் குடும்பமாக வந்து தெருவில் போராட்டம் செய்துகொண்டு இருக்கிறார்கள். இப்படி எல்லாவற்றிற்கும் ஒரு சரியான பாடத்தைப் புகட்டுவதற்குச் சரியான நேரம்தான் இந்த மதுராந்தகம் இடைத்தேர்தல்.

6-ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்றீர்கள் என்றால் வாக்குப்பெட்டியில் மூன்றாவது பெயர், மூன்றாவது இடத்தில் பரந்தாமன் பெயர் இருக்கும், பக்கத்தில் உதயசூரியன் சின்னம் இருக்கும். 6-ஆம் தேதி மூன்றாவது இடத்தில் இருக்கக்கூடிய பரந்தாமனுடைய பெயரும் உதயசூரியன் சின்னமும் வாக்கு எண்ணிக்கையான 9-ஆம் தேதி முதலிடத்திற்கு வர வேண்டும்.

நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் அத்தனை பேரும் முடிவு செய்துவிட்டீர்கள், உதயசூரியன் சின்னத்தை ஜெயிக்க வைக்க வேண்டும். பல்வேறு மாவட்டங்களிலிருந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட வந்திருக்கிறீர்கள். இங்கே இருக்கக்கூடிய தொகுதி மக்களும் வந்திருக்கிறீர்கள், வாக்காளப் பெருமக்களும் வந்திருக்கிறீர்கள். நீங்கள் ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். `மாற்றம் வேண்டும் மாற்றம் வேண்டும்' என்று வாக்களித்தீர்கள். ஆனால், இன்றைக்கு எப்போர்ப்பட்ட மாற்றத்தை இந்த முதலமைச்சர் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்? உங்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்.

நான் உங்களிடத்தில் கேட்டுக்கொள்வது இன்னும் நம் கைகளில் ஒரு வாரம் இருக்கிறது, எட்டு நாட்கள் இருக்கின்றன. இந்த எட்டு நாட்களும் நீங்கள் ஒவ்வொருவரும் இந்த பிரச்சாரத்தை உங்களுடைய குடும்பத்தினரிடம் பேசுங்கள். உங்களுடைய நண்பர்கள், உங்களுடைய உறவினர்கள், உங்கள் வீட்டுப் பக்கத்தில் இருப்பவர்கள், எதிர் வீட்டில் இருப்பவர்களிடம் எல்லாம் பேசுங்கள்.

ஏன் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும், ஏன் பரந்தாமனை ஜெயிக்க வைத்து சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற பிரச்சாரத்தை அடுத்த எட்டு நாட்கள் நீங்கள் சரியாகச் செய்தீர்கள் என்றால், நிச்சயம் பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் நம்முடைய பரந்தாமன் அவர்கள் ஜெயிக்கப் போவது உறுதி. மீண்டும் மதுராந்தகத்தில் உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது என்ற செய்தியை 9-ஆம் தேதி நீங்கள் கொடுக்க வேண்டும்.

உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவருடைய மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக, பூரிப்பாக சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாகக் கேட்கிறேன்.

வருகின்ற 6-ஆம் தேதி சகோதரர் பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து மிகப் பெரிய வெற்றியைத் தேடித்தாருங்கள். உங்கள் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள்

தேர்தல் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்டச் செயலாளர் சுந்தர் சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம், கதிர் ஆனந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.ஆர்.நாராயணன், கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், நகர மன்றத் தலைவர் மலர்விழி குமார், நகரக் கழகச் செயலாளர் எம்.பி. குமார், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், அப்துல் மாலிக், இளைய ராஜா, ஜி.பி. ராஜா, பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் யுவராஜ், கோல்டு பிரகாஷ், கார்த்திக், திருத்தணி கிரண், லோகேஷ், தாகப்பிள்ளை, ராயல் அன்பு, துணை அமைப்பாளர்கள் ஆண்டோ செல்வராஜ், சஞ்சய் காந்தி, இளம்பருதி, நகர இளைஞர் அணி அமைப்பாளர் முகமது புகாரி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் செயலாளர் ராஜேந்திரன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் முகமது ரபீக், எஸ்.டி.பி.ஐ. கட்சி அக்பர் அகமது, மல்லை சத்யா, உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

சிறுவனின் குடும்பத்திற்கு ரூ.20 லட்சம் நிவாரணம் வழங்கிடுவீர்!

அரசின் அலட்சியத்தால் பரிதாபமாக உயிரிழந்த சிறுவன்!

புதுச்சேரி அரசுக்கு தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா கண்டனம்!

புதுச்சேரி, செப். 29–

இது தொடர்பாக புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர் இரா. சிவா அவர்கள் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: –

உலகப் புகழ்பெற்ற புதுச்சேரி கடற்கரை சாலையில், முறையாக பராமரிக்கப்படாமல் அடியில் துருப்பிடித்து பலவீனமாக இருந்த மின்கம்பம் சரிந்து விழுந்து, பொம்மை விற்றுக் கொண்டிருந்த உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த தஸ்லின் – ரிஹானா தம்பதியினரின் 5 வயது சிறுவன் முகமது பாசில் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒட்டுமொத்த புதுச்சேரியையே உலுக்கியுள்ளது. இந்த துயர நிகழ்வு ஆழ்ந்த வேதனையையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது. சிறுவனை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



புதுச்சேரியில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான உள்ளூர் மற்றும் சுற்றுலாப் பயணிகள் கூடும் கடற்கரைச் சாலையில் நடந்தேறிய இச்சம்பவத்திற்கு புதுச்சேரி அரசே முழு பொறுப்பேற்க வேண்டும். மக்களின் உயிரைக் காப்பாற்ற தவறிய என்.ஆர்.காங்கிரஸ்–பாஜக கூட்டணி அரசை தி.மு.க. வன்மையாக கண்டிக்கிறது.

சுற்றுலாத் துறையின் நிதியில் பொதுப்பணித்துறையால் போடப்பட்ட மின்கம்பம் எந்த காற்றும் இல்லாத நேரத்தில் விழுந்து ஒரு குழந்தையின் உயிரை பறித்திருக்கிறது. இது முழுக்க மின்துறையின் அலட்சியப் போக்கையே காட்டுகிறது. முதல்வர் இவ்விஷயத்தை விபத்து என்று அலட்சியம் காட்டக்கூடாது. உயிரிழந்த குழந்தையின் குடும்பத்திற்கு புதுச்சேரி அரசு ரூ. 20 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும். அரசு விபத்துக்கான காரணத்தை உடனடியாக ஆராய வேண்டும்.

கடற்கரை சாலை மட்டுமின்றி, புதுச்சேரி நகர் மற்றும் புறநகரின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பழுதடைந்த, துருப்பிடித்த மின் கம்பங்களை உடனடியாக கண்டறிந்து போர்க்கால அடிப்படையில் மாற்றியமைக்க அரசு உத்தரவிட வேண்டும். நகரப் பகுதிகளில் மின் கம்பங்கள் மீது சாய்ந்திருக்கும் மரக்கிளைகளை வெட்ட வேண்டும். விபத்து ஏற்பட்ட பிறகு சரி செய்வதை தவிர்த்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை வேண்டும்.

வனத்துறை அனுமதி மறுக்கிறது என்ற குற்றச்சாட்டு உள்ளது. பொதுப்பணித்துறை, உள்ளாட்சித் துறை, வனத்துறை உள்ளிட்ட அரசுத் துறைகளை ஒன்றிணைத்து அவசர கால நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மனித உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் மரங்களை அப்புறப்படுத்த வேண்டும். அதற்கு பதில் புதிய மரக்கன்றுகளை நட வேண்டும். மின்கம்பங்களில் தேவையில்லாமல் தொங்கும் மின் ஒயர்களை அப்புறப்படுத்த வேண்டும். மின்கம்பங்கள் மீது கட்டப்பட்டுள்ள பதாகைகள், கேபிள் ஒயர்களை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். மீறி கட்டுபவர்கள் மீதுகடும் நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

அதேபோல் சுற்றுலாப் பயணிகளின் உயிருக்கும், உடமைக்கும் அரசு தான் பாதுகாப்பு அளிக்க வேண்டும். கடற்கரை சாலையை ஒட்டிய கடலில் படகு சவாரி என்ற பெயரில் போலியாக அனுமதி இல்லாமல் படகு வைத்தும், தகுந்த பாதுகாப்பு மற்றும் தற்காப்புக் கவசங்கள் இன்றியும் இயக்கி விபத்துக்கள் ஏற்படுவதும், அது அரசியல் பின்புலத்தால் மறைக்கப்படுவதும் வாடிக்கையாகி வருகிறது. இதனால் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அரசு அதிகாரிகள் கொண்ட குழுவை அமைத்து ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு படகு சவாரியை முறைப்படுத்த வேண்டும். தகுதி உள்ளவர்களுக்கு மட்டும் படகை இயக்குவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். மீண்டும் இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படாவண்ணம் அரசு நிர்வாகம் இனியாவது விழித்துக் கொண்டு பொதுமக்களின் உயிருக்கு பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பி. அந்தோணிசாமி

செப்டம்பர் 29 (2000)



திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியவுடன் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, முதன்முதலாக விக்கிரமசிங்கபுரத்தில் கிளைக் கழகத்தை தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்ட துணைச் செயலாளர், அம்பாசமுத்திரம் ஒன்றிய பொறுப்பாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

தொழிற்சங்கவாதியான இவர், மதுரா கோட்ஸ் தொழிற்சங்க செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(27.09.2026)

கோவையில் 300 கிலோ குட்கா பறிமுதல்!



கர்நாடகாவிலிருந்து காரில் கோவைக்கு கடத்திவரப்பட்ட 300 கிலோ குட்கா பறிமுதல். சொகுசு காரின் பின் இருக்கையில் மூட்டை, மூட்டையாக கடத்திவரப்பட்ட 300 கிலோ குட்கா பறிமுதல். கோவில்பாளையம் அருகே காவல் துறையினரின் வாகன பரிசோதனையின்போது சிக்கிய 300 கிலோ குட்கா.

அண்ணாமலை பல்கலை கழக வேதியியல் துறை தலைவர் மீது புகார்!

வேதியியல் துறை தலைவர் ராஜேந்திரன் மீது 3ம் ஆண்டு ஆராய்ச்சி படிப்பு படித்து வரும் சிதம்பரத்தைச் சேர்ந்த மாணவி புகார். வேதியியல் துறை தலைவர் ராஜேந்திரன், மாணவியின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து அவதூறாக பேசியதாக குற்றச்சாட்டு. அருவருக்கத்தக்க வார்த்தைகளை பயன்படுத்தி மாணவியை திட்டியதாகவும் புகார். வேதியியல்துறை தலைவர் மீது அண்ணாமலை நகர் காவல்நிலையத்தில் புகார் அளித்த மாணவி. மாணவியின் புகாரின் பேரில் வேதியியல்துறை தலைவர் ராஜேந்திரன் மீது 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை.

தாராபுரத்தில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்திய த.வெ.க அமைச்சர்கள்!

தாராபுரத்திற்கு வந்த அமைச்சர்களின் கார்கள் சாலையில் ஆங்காங்கே நிறுத்தப்பட்டதால் போக்குவரத்து பாதிப்பு. தாராபுரம் உடுமலை சாலையில் த.வெ.க அமைச்சர்கள் புஸ்ஸி ஆனந்த், அருண்ராஜ், பார்வேஸ் ஆகியோரின் கார்கள் சாலையில் நிறுத்தப்பட்டதால் போக்குவரத்து பாதிப்பு. அமைச்சர்கள் மற்றும் த.வெ.கவினரின் கார்களால் தாராபுரம் உடுமலை சாலையில் போக்குவரத்து பாதிப்பு. அமைச்சர்களின் கார்களால் ஏற்பட்ட போக்குவரத்து பாதிப்பால் மருத்துவமனை செல்வோர் கடும் அவதி.

காதலிக்கு தொல்லை கொடுத்த நண்பர் கொலை!



காதலிக்கு செல்போனில் மேசேஜ் அனுப்பி தொல்லை கொடுத்த நண்பரை கொலை செய்த இளைஞர். சென்னையை அடுத்த மாங்காடு அருகே கொழுமணிவாக்கம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் விக்கி, இளம்பெண் ஒருவரை காதலித்துள்ளார். விக்கியின் நண்பர் யுவனேஷ், விக்கியின் காதலிக்கு செல்போனில் மெசேஜ் அனுப்பி தொல்லை கொடுத்ததாக புகார். விக்கி தமது மற்றொரு நண்பர் பார்த்திபனுடன் சென்று தமது காதலிக்கு தொல்லை தர வேண்டாம் என்று யுவனேஷிடம் பேச்சுவார்த்தை. யுவனேஷ் பிடிகொடுக்காததால், ஆத்திரமடைந்த விக்கியும், பார்த்திபனும் மதுபாட்டில் மற்றும் கல்லால் தாக்கி கொலை செய்தனர்.

யுவனேஷின் உடலில் கல்லைக் கட்டி, அருகே இருந்த கிணற்றில் வீசினர். பின்னர், பயத்தில் விக்கியும், பார்த்திபனும் மாங்காடு காவல்நிலையத்தில் சரண். தீயணைப்புவீரர்கள்உதவியுடன்யுவனேஷின்உடலைமீட்டுமருத்துவமனைக்கு அனுப்பிய போலீசார்.

மதுராந்தகத்தில் மாற்றுத்திறனாளி மாணவி பாலியல் வன்கொடுமை!



மதுராந்தகம் கொங்கரைமாம்பட்டு கிராமத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை. வீட்டில் தனியாக இருந்த மாற்றுத்திறனாளி மாணவியை 4 பேர் கொண்ட கும்பல் பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார்.

மாற்றுத்திறனாளி மாணவி பாலியல் வன்கொடுமை தொடர்பாக மேல்மருவத்தூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார். மாற்றுத்திறனாளி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை தொடர்பாக 10 க்கும் மேற்பட்டோரிடம் போலீசார் விசாரணை.

வண்டலூரில் மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட நிலையில் மதுராந்தகத்திலும் மாணவி பாலியல் வன்கொடுமை. த.வெ.க ஆட்சியில் தொடரும் பாலியல் வன்கொடுமை சம்பவங்களால் பொதுமக்கள், பெண்கள் அச்சம்.


தந்தையை கொடூரமாக வெட்டிக் கொன்ற மகன்!



தேனி கருநாக்கமுத்தன்பட்டியில் தந்தையை கொடூரமாக வெட்டிக் கொன்று தலையை துண்டித்த மகன்.

நள்ளிரவில் வீட்டின்முன் இருந்த முருங்கை மரங்களை வெட்டிய மகன் தந்தை தடுத்ததால், அரிவாளால் கொடூரமாக வெட்டிக் கொலை.

சேலத்தில் வாலிபரை கத்தியால் குத்தி விட்டு தப்பி ஓடிய பைக் திருடன்!



சேலம் குரங்குசாவடி அருகே உள்ள செங்கல்பேட்டை பகுதியை சேர்ந்தவர் செல்வ விக்னேஷ்(28). இவர் கடந்த 25ஆம் தேதி இரவு தனது வீட்டின் முன்பு தனது இருசக்கர வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தார். அப்போது மர்ம நபர் ஒருவர் அந்த வாகனத்தை திருடி சென்று விட்டார்.

திருடனை கட்டி போடுவதற்காக வாலிபர்கள் முயற்சி செய்தபோது, அந்த திருடன் தான் வைத்திருந்த கத்தியை திடீரென்று எடுத்து சுழற்றவே இளைஞர்கள் தெறித்து பின் வாங்கினர். செல்வ கணேஷ் மட்டும் அவனது சட்டையை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தபோது திருடன் செல்வ விக்னேசின் இடுப்பில் கத்தியால் குத்தி விட்டு அவரது கையையும் கீழித்து விட்டு தப்பி ஓடி விட்டான்.

த.வெ.க. நிர்வாகி கொலை வழக்கில் மனைவி கைது செய்து விசாரணை!

புதுக்கோட்டை மாவட்டம் மழையூர் அருகே உள்ள கீழவாண்டான்விடுதியைச் சேர்ந்தவர் சூரியபிரகாஷ் (33). இவர் தமிழக வெற்றிக் கழகத்தின் உள்ளூர் நிர்வாகியாகப் பணியாற்றிவந்தார். இவரது மனைவி சரண்யா (34). சூரியபிரகாஷ் வீட்டின் உத்தர மரக்கட்டையில் புடவையால் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக மனைவி சரண்யா மழையூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

சூரியபிரகாஷின் உடற்கூறாய்வு அறிக்கை தடய அறிவியல் ஆய்வக அறிக்கையில் கொலை நடந்துள்ளது என்று தெரியவந்த நிலையில் கிராம நிர்வாக அலுவலரிடம் சரண்யா அளித்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் இது தற்கொலை அல்ல திட்டமிட்ட கொலை என்பது தெரியவந்தது.

இதையடுத்து, சந்தேக மரண வழக்கை கொலை வழக்காக மாற்றம் செய்த மழையூர் காவல்துறையினர் கணவனைக் கொலை செய்த குற்றத்திற்காக மனைவி சரண்யாவை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சரண்யா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு திருச்சி பெண்கள் தனிச்சிறையில் அடைக்கப்பட்டார்.